**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 40/2022**

பெயர் : கணேசன் (DW1) (Cross )

த/க/பெ. :

தேதி :21.08.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்து ஆதியில் எனக்கு சொந்தம் என்றால் சரிதான். 28.12.2011 ம் தேதி தாவா சொத்தை லலிதா பெயருக்கு கிரய சாசனம் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. அது அடமான சாசனம். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 1 தான் நான் வாதிக்கு எழுதிக்கொடுத்த சாசனம். நான் சொல்வது போல் அடமான சாசனம் என்று அதில் எழுதப்படவில்லை, கிரய சாசனம் என்று தான் உள்ளது என்றால் சரிதான். அதில் பக்கம் 4 ல் பூரா கிரய தொகை 4 லட்சத்தை பெற்றுக் கொண்டு நாளது தேதியில் கிரய ஆவணம் ஏழுதிக் கொடுத்து சொத்தின் சுவாதீனத்தை விட்டு விட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் பக்கம் 5 ல் பட்டாவை அவர் பெயரில் மாற்றிக் கொண்டு சுதந்திரமாக அனுபவிதிது கொள்வதுஎன்று உள்ளது என்றால் சரிதான். அதன் படி வாதி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்தற்கான உத்தரவு வா.சா.ஆ.2 என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 கிரய சாசனம்என்பது அதன் அடிப்படையில் வாதி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு போட்டுள்ளார் என்பதை தெரிந்துக் கொண்டேன். நான் விற்ற சொத்தை 2019 ம் ஆண்டு நான் ஆக்கிரமித்து விட்டதாக திரும்ப கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். வாதியின் கணவர் சண்முகம் என்றால் சரிதான். அவர் 1990 ல் காலமாகி விட்டார். வாதியின் மகன் ராஜராஜ சோழன் என்றால் சரிதான். அவர் சிங்கப்பூரில் வேலை செய்துவருகிறார். வாதியின் மகள் ரேணுகா அவர் சிதம்பரத்தில் திருமணமாகி வாழ்ந்து வருகிறார். வாதிக்கு ஆண் துணை யாரும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு முன் புறம் என் வீடு என்றால் சரிதான். தாவா சொத்திற்கு முன் புறம் என் வீடு உள்ளதாலும், வாதிக்கு ஆண் துணை இல்லாததாலும் தாவா சொத்தை 25.12.2019 ம் தேதி நான் ஆக்கிரமித்துக் கொண்டேன் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் ஆக்கிரமித்தது தொடர்பாக பூம்புகார் காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். எங்கள் இருவரையும் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சிவில் வழக்கு என்பதால்

நீதிமன்றத்தை நாடுமாறு சொன்னார்கள் என்றால் சரிதான். அதன் படி வாதி நீதிமன்றத்தில் வசம் கேட்டுள்ளார் என்றால் சரிதான். அவர்கள் கேட்டபடி வச பாகாரம் வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல.